1984 பிப்ரவரி 16]

மாண்புமிகு மேலவைத் தலைவர் : தலைவருக்கு எழுதினால் சரியாகச் செசொல்லிவிடலாமே : (சிரிப்பு)

திரு. ம. சங்கரலிங்கம் : தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம் தமிழகத்தோடு இணைக்கப்பட்டு பல ஆண்டுகள் ஆகிவிட்ட பிறகும், அங்குள்ள ஓய்வு பெற்ற ஆசிரியர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவதில் இன்னும் சில பிரச்சினைகள் இருப்பதாகத் தெரிகிறது. எனவே அமைச்சர் அவர்கள் தனியாக ஒரு அதிகாரியை அனுப்பி அதுபற்றிய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பார்களா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அதுபற்றி அவர்கள் ஆராய்ந்துதான் இந்த முடிவுகளை எடுத்திருக்கிறார்கள். 1977-க்குப் பிறகு அந்த ஓய்வூதியம் கிடைக்கின்ற வகையிலே வாய்ப்புகளை ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

(முற்பகல் 9—40)

திரு. ம. சங்கரலிங்கம் : தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம் தமிழகத்தோடு சேர்ந்த பிறகு ஓய்வு பெற்றவர்கள் சிலருக்கு இன்னும் ஓய்வூதியம் கொடுக்கப்படவில்லை என்பதுதான் அது. அதுபற்றி அரசிடம் முறையிடுகின்றபோது, விரிவாகப் பரிசிலனை செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிற்கு மாற்றப்பட்ட கன்னியாகுமரி மற்றும் திருநெல்வேலி மாவட்டத்தின் செங்கோட்டைப் பகுதியிலுள்ள உதவி பெறும் பள்ளிகளில் பணிபுரிந்து, 1—11—1956-க்கு முன் ஓய்வு பெற்ற உதவி பெறும் பள்ளி ஆசிரியர்களும், 1—11—1956-க்கு முன்போ, பின்போ ஓய்வு பெற்று திருவிதாங்கூர் கொச்சி மாநிலத்தில் பணியாற்றி பணிக்கொடை பெற்ற மற்றும் ஒப்படைக்கப்பட்ட மற்றும் வெளியேற்றப்பட்ட பள்ளி ஆசிரியர்கள், இவர்களுக்கு 9—7—1980ல் மேற்படி ஓய்வு ஊதியம் 1—4—1978 முதல் மாதம் ஒன்றுக்கு ரூ. 65லிருந்து ரூ. 100க்கு உயர்த்தப்பட்டிருக்கின்றது. அதற்கு முன்னாலே 1—5—1977லிருந்து ரூ. 65 வாங்கியிருக்கிறார்கள்.

விவேகானந்தா கல்லூரி, பெரியநாயக்கன்பாளையம்

* 27. வினா—**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கோவை மாவட்டம், பெரியநாயக்கன்பாளையம், விவேகானந்தா கல்லூரியின் நிர்வாகம், தன் போக்குக்கு வகுப்புகளையும் மாணவர் விடுதியையும் மூடியுள்ளது என்பது உண்மையா ?

[1984 பிப்ரவரி 16

(இ) ஆம் எனில், அதன்மீது அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) கோவை இராமகிருஷ்ணா மிஷன் வித்யாலயா கல்லூரி நிர்வாகம் சென்ற ஆண்டு நடைபெற்று வந்துள்ள வகுப்புகளில் பி.காம். பட்டப் படிப்பு முதல் ஆண்டு வகுப்பை மட்டும் மூடியுள்ளது. மற்ற வகுப்புகள் வழக்கம்போல் நடைபெற்று வருகின்றன.

மாணவர் விடுதியில் பி.காம். பட்டப் படிப்பு மாணவர்கள் முதலில் சேர்க்கப்படவில்லை என்றாலும் அவர்களை பின்னர் சேர்க்க நிர்வாகம் தீர்மானித்துள்ளது.

(இ) பி. காம் வகுப்பு மூடியது தொடர்பாகக் கல்லூரிக் கல்வி இயக்குநர் அரசுக்கு ஓர் அறிக்கை அனுப்பியுள்ளார். அது அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : தலைவர் அவர்களே, இது போன்ற தனியார் நிறுவனங்கள், தனியார் கல்லூரிகள் நிர்வாகங்கள் அரசுக்கு எந்த விதமான முன் அறிவிப்பும் தராமலேயே வகுப்புகளை அல்லது விடுதியை மூடுகின்ற நிலையைத் தவிர்க்க நிரந்தரமாக ஒரு புதிய சட்டத்தையாவது உருவாக்கி அமுல்படுத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, இப்போது இருக்கின்ற முறைப்படி அவர்கள் அரசுக்கு ஒரு கடிதத்தை எழுதிவிட்டு மூடிவிடலாம் என்று இருக்கிறது. ஆனால் அதை அரசு தடுத்து நிறுத்துகின்ற அளவுக்கு அதிகாரம் இல்லை. அந்த அதிகாரம் வருகின்ற வகையில் சட்டத்தைத் திருத்துவதற்கு வேண்டிய முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறோம்.

செல்வி ஆ. லீலாவதி : தலைவர் அவர்களே, நிர்வாகிகள் அந்த நிறுவனங்களுக்கு ரெகக்னிஷன் வாங்கும்போதே, அம்மாதிரியாக அவர்கள் தன்னிச்சையாக வகுப்புகளை மூடமாட்டார்கள் என்று எழுத்துமூலம் அரசு எழுதி வாங்குமா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, அப்படி எழுதி வாங்கினாலும், சட்டப்படி அவர்களுக்கு இருக்கின்ற உரிமைகளை அவர்கள் பயன்படுத்துகின்றார்கள். பி. காம். வகுப்புகளுக்கு அனுமதியையே மிகச் சிரமப்பட்டுத்தான் வாங்குகின்றார்கள். அவ்வளவு சிரமப்பட்டு வகுப்புகளுக்கு அனுமதி வாங்குகின்றவர்களுக்கு மூடுகின்ற நிலை [illegible]

கின்றபோது, அரசினுடைய அனுமதியைப் பெறாமலேயே வகுப்புகளை மூடக் கூடிய வாய்ப்பு இருக்கின்றது. இதற்குக் காரணம் கேட்டால், அவர்கள், அங்கே மாணவர்கள், ஆசிரியர்கள் ஒத்துழைப்பு தரவில்லை என்கின்றார்கள். விவேகானந்தா கல்லூரி இராமகிருஷ்ணா மிஷனால் நடத்தப்படுகின்றது. அங்கே இருக்கின்ற மாணவர்கள், ஆசிரியர்கள் ஒத்துழைப்பு இல்லாததால், அதை நடத்த முடியவில்லை என்று சொல்கின்றார்கள். அப்படிப் பார்க்கும் போது அவர்கள் வாங்க முடியாத அளவுக்கு இருக்கும் சலுகையை சிரமப் பட்டு வாங்கியபின், ஏன் மூடுகின்றார்கள் என்று தெரிய வேண்டும். அது குறித்து அரசு என்ன நடவடிக்கை எடுப்பது என்பதுபற்றி சட்டத் துறை யோடு நாம் கலந்தாலோசித்து வருகிறோம்.

டாக்டர் இரா. சனார்த்தனம்: தலைவர் அவர்களே, இராமகிருஷ்ண வித்யாலயம் நான் படித்த பள்ளி. நான் படித்த காலத்தில் ஒரு நாளும் இப்படி நடக்கவில்லை. இப்போது இவ்வாறு நடக்கிறது என்றால், அந்த நிர்வாகம் தவறு செய்கின்றதா ? பி. காம். வகுப்பு ஆசிரியர்களை வீட்டுக்கு அனுப்புவது என்றால், அந்த வகுப்பை நிர்வாகம் செய்ய முடியவில்லையா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, அதைத் தான் நாங்கள் பரிசீலித்து வருகிறோம். அரசு அதை ஏற்றுக்கொள்ள வில்லை. ஆனால் அவர்கள் சட்டப்படி அவர்களுக்கு இருக்கக்கூடிய உரிமைகளைப் பயன்படுத்துகின்றார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அங்கே படித்தவர்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. அருணாசலம் அவர்கள் அந்தக் கல்லூரியின் தலைவராகவே இருந்து வந்திருக்கிறார். அதையெல்லாம் வைத்துக்கொண்டு நாம் எதையும் பேசுவதற்கில்லை.

திரு. சி. இராமலிங்கம்: தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியப் பள்ளி ஆசிரியர்கள் நிலையில் உயர்த்தப்படும்போது, வேறு உயர் பள்ளிகளுக்குப் போகின்ற அடிப்படை, அங்கு ஈர்த்துக்கொள்கின்ற அடிப்படை இருக் கின்றது. இப்படி ஒரு ஊராட்சியிலிருந்து இன்னொரு ஊராட்சிக்குப் போவதைப் போல், ஒரு மாவட்டத்திலிருந்து இன்னொரு மாவட்டத்திற்கு மாறுதல் செய்கின்ற உத்தேசம் அரசுக்குண்டா ?

மாண்புமிகு மேலவைத் தலைவர்: உறுப்பினர் கேட்கின்ற துணைக் கேள்விக்கும் மூலக் கேள்விக்கும் சம்பந்தமில்லை.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, போன கேள்விக்கு இப்போது உறுப்பினர் அவர்கள் துணைக் கேள்வி போடு கின்றார்கள் என்று கருதுகிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY LIBRARY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS